# இயேசுவின் திருவுடல் திரு இரத்தப்பெருவிழா

## திருவழிப்பாட்டு ஆண்டு A (22-06-2014)

**திருப்பலி முன்னுரை:** - 1

*கிறிஸ்துவில் பிரியமுள்ளவர்களே, சிறார்களே, இளைய உள்ளங்களே, சகோதர சகோதரியரே! இன்று ஆண்டவர் இயேசு தம் திருவுடலையும், இரத்தத்தையும் நமக்கு உணவாகத் தரும் அவரது பேரன்பைப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம்.*

*மனிதரும், விலங்குகளும் உயிர்வாழ வேண்டுமானால், உடல் இயங்க வேண்டும். அதற்கு இரத்தம் தேவை. இந்த இரத்தத்தை உற்பத்தியாக்க உணவு தேவை. அத்தோட மனிதரின் சமூக வாழ்விற்கு உறவுகள் தேவை. எனவே நம்முடைய ஆன்மீக, சமூக வாழ்வு சீராக அமைய இயேசு தன்னுடைய உடலையும், இரத்தத்தையும் நமக்கு இலவசமாகவே கொடுத்துள்ளார். நாம் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் அதனை நிறைவாகப் பெறும் பொருட்டு தன் உடல், இரத்தம் அகியவற்றை வழங்கியுள்ளார். இயேசுவின் இந்தத் தியாக வாழ்வு வெறுமனே உடலையும், இரத்தத்தையும் கொடுத்தலோடு முடிந்துவிடவில்லை. மாறாகத் தமது அன்பை, இரக்கத்தை, மன்னிப்பை, ஆசீர்வாதத்தை தொடர்ந்து நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு தொடர் செயற்பாடாக இருந்து கொண்டேயிருக்கின்றது. அதனுடைய பிரதிபலிப்பே நாளாந்தம் நாம் திருப்பலியில் உட்கொள்ளுகின்ற இயேசுவின் திருவுடலாக மாற்றம் பெறும் நற்கருணையாகும். எனவே நாம் இந்த நற்கருணையைத் தகுதியுடன் உட்கொண்டு, கிறிஸ்துவின் திருவுடலாகிய நற்கருணை குறித்துக்காட்டும் அன்பு, ஒற்றுமை, அன்பிய சமூக வாழ்வு ஆகியவற்றை நாம் அர்த்தமுள்ள விதத்திலே வாழ வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.*

திருப்பலி முன்னுரை - 2

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழா. இத்தினத்தில் நாம் ஆண்டவரின் திருவுடல், திருஇரத்தம் என்பவை குறித்துக்காட்டும் ஒற்றுமை, அன்பு ஆகியவைபற்றிச் சிந்திக்க ஒன்று கூடியுள்ளோம்.

நாளாந்தம் இயேசுவின் திருவுடலாம் நற்கருணையை உட்கொள்ளும் நாம், அவர் நமக்காகச் செய்த தியாகங்களையும், நமக்குச் செய்த எல்லா அருள் நலன்களையும் நினைந்து அவருக்கு நன்றி கூறவும், அவர் நமக்கு விட்டுச்சென்ற அன்பு, ஒற்றுமை, தியாகம், மன்னிப்பு, அர்ப்பணம் ஆகிய தலைசிறந்த பண்புகளை நாமும் வாழ்ந்து பிறரோடு அவற்றைப் பகிர்ந்து கொள்ளவும் அழைக்கப்படுகின்றோம். நாம் உழைக்க வில்லையேல் நமக்கு உணவில்லை. இதைத்தான் உழைக்க மனமில்லாதவன் எவரும் உண்ணலாகாது என்று புனித பவுல் அடிகளார் கூறுகிறார். வாழ்வின் உணவாக நற்கருணை வடிவில் வந்த இயேசு நமது ஆன்ம தாகத்தையும், பசியையும் போக்குகிறார் நம்மைக் குணப்படுத்துகிறார். நம் வாழ்வைப் புதுப்பிக்கிறார். விசுவாச வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேற ஆற்றல் தருகிறார். நற்கருணை விருந்தில் நம்மீது இயேசு வைத்திருக்கும் அன்பின் ஆழ அகலத்தைப் புரிந்துக்கொள்ள வழி வகுக்கிறார். நம்மோடு நெருக்கமான உறவுகொள்ள நற்கருணையில் வாழும் இயேசுவை ஆவலோடு வரவேற்போம். ஆகவே நாம் அனைவரும் என்றென்றும் நம்மோடு நிலைத்து நின்று வாழ்வுதரும் இறைவனது பேரன்பிற்காக நன்றி சொல்லுவோம், ஆண்டவரின் திருவுடல், திருஇரத்தம் என்பவை குறித்துக்காட்டும் ஒற்றுமை, அன்பு ஆகியவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து இறைவனின் சாட்சிகளாய் வாழ நம்மை அர்ப்பணித்து தொடரும் திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.*

**"எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர் நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்;" என்று மொழிந்த எம் அன்பு இறைவா.**

*எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: தூய ஆவியின் நிறை வல்லமையால் அவர்களை நிரப்பி, கிறிஸ்துவின் திருவுடலாகிய நற்கருணை குறித்துக்காட்டும் அன்பு, ஒற்றுமை, அன்பிய சமூக வாழ்வு ஆகியவற்றை அர்த்தமுள்ள விதத்திலே வாழுவதற்கு வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**வானக உணவான இயேசுவே.**

*நிலைவாழ்வு தரும் உணவாக உம்மையே எங்களுக்குத் தந்திருப்பதற்காக உம்மைப் போற்றுகிறேன். நிறைவு தரும் உம் திருவுடலை நான் மதிப்புடன் பெற அருள் தாரும். மாபெரும் உமது கொடைக்காக எந்நாளும் நான் நன்றி சொல்லி வாழ உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*உமது வார்த்தையால் எம்மைக் குணப்படுத்தும் தந்தையே இறைவா!*

*பல்வேறு நோய்களினாலும், கவலைகளினாலும் பாதிக்கப்பட்டு வேதனையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் உடல் நலமும், மனநலமும் பெற்று மகிழ்ந்திட அருள்கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**நீதியை நிலைநாட்டும் இறைவா.**

*உம்முடைய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் உமது திருமகனாம் இயேசுவின் திருவுடலாகிய நற்கருணைக்குரிய மாண்பையும் மதிப்பையும் உணர்ந்து வாழவும் இறைவார்த்தையாலும் நற்கருணையாலும் ஊட்டம் பெற்று உமது சாட்சிகளாக வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**அன்புத் தந்தையே இறைவா!**

*எமது இளைஞர்கள் அனைவரும் நற்கருணை குறித்துக் காட்டும் தூய்மையான வாழ்வை வாழ்ந்து தாம் வாழுகின்ற சூழலில் என்றும் ஒளியாகத் திகழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**"வாழும் தந்தை என்னை அனுப்பினார் நானும் அவரால் வாழ்கிறேன் அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர்;" என்று மொழிந்தவரே**

*எம்பங்கில் உள்ள சிறுவர் சிறுமியர் இளையோர் பல்வேறு குழுப்பொறுப்பாளர்கள் அனைவரும் உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள, அனுப்பப்பட்டவர்கள் என்பதனை உணர்ந்தவர்களாக படிப்பிலும் நல்லொழுக்கத்திலும் விசுவாசத்திலும் உதவிபுரிபவர்களாகவும் தங்கள் பணிகளிலே பொறுப்பு மிக்கவர்களாகவும் வாழ்ந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*